සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

அறிவுறுத்தல்கள் :

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றுக.
※ **1 தொடக்கம் 50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** விடையைத் தெரிந்தெடுத்து, **தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் புள்ளடி** (X) இடுக.
※ ஒரு விடைக்கு **02** புள்ளிகள். 50 வினாக்களுக்கும் **100** புள்ளிகள்.

● **1 – 15** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் தலைப்புக்குப் பொருத்தமான சரியான கூற்றுகளின் தொகுதியைத் தெரிவு செய்க.

1. அரசியல் விஞ்ஞானம் என்பது
   A – அரசு, அரசாங்கம் பற்றிய விஞ்ஞானமாக அறியப்படுகிறது.
   B – கோட்பாட்டு அரசியல், பிரயோக அரசியல் என்ற இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
   C – சமூக விஞ்ஞானங்களின் குடும்பத்தைச் சேர்ந்த பாடமாகும்.
   D – மிகப் பழமையான பாடமாக இருப்பதோடு கி.மு. 4ஆம் நூற்றாண்டிலேயே முறையான கற்கைக்குட்பட்டது.
   E – விஞ்ஞான முறைகளின் மூலம் மட்டுமே கற்கக்கூடிய பாடமாகும்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

2. அரசியல் என்பது
   A – அரசியல் விஞ்ஞானத்தின் நடைமுறைப் பகுதியாகும்.
   B – அதிகாரப் போராட்டத்தை மேற்கொள்ளும் வழிமுறையாகும்.
   C – சமூக உயர்குழாமினரால் மேற்கொள்ளப்படும் ஒரு விளையாட்டாகும்.
   D – பெறுமானங்களை அதிகாரத்தைப் பயன்படுத்திப் பகிர்ந்தளிக்கும் வழிமுறையாகும்.
   E – யார் எதனை, எப்போது, எவ்வாறு பெற்றுக்கொள்வார் என்பதனை நிர்ணயிக்கும் வழிமுறையாகும்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

3. நடத்தைவாதம் என்பது
   A – 1940 களில் அமெரிக்காவில் அரசியல் விஞ்ஞானக் கற்கையில் தோன்றிய ஒரு கல்விசார் இயக்கமாகும்.
   B – அரசியல் செயற்பாட்டாளர்களின் அவதானிக்கக்கூடிய நடத்தையை மட்டும் பகுத்தாய்வதனை வலியுறுத்துகின்றது.
   C – பேரின அரசியல் நடத்தையைக் கற்பதனை விருத்தி செய்துள்ளது.
   D – கோட்பாட்டு நிர்மாணத்தையும் ஆய்வு முறையியலையும் அபிவிருத்தி செய்வதில் பங்காற்றியுள்ளது.
   E – நுட்பமுறைகளைக் காட்டிலும் விளைவுகளில் கவனம் செலுத்தியுள்ளது.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

4. அரசு என்பது
   A – வரையறுக்கப்பட்ட ஓர் எல்லைப்புறத்தினில் வாழும் மக்களினால் ஒழுங்கமைக்கப்பட்ட ஓர் அரசியல் சமூகமாகும்.
   B – கிரேக்க காலத்தில் நகர அரசாக முதலில் ஆரம்பமாகியது.
   C – பொது நலன்களுக்காகச் செயற்படுதல் என்ற நாமத்துடன் கூடிய விசேட அரசியல் நிறுவனங்களின் தொகுதியைக் கொண்டுள்ளது.
   D – சட்டத்தை ஆக்குவதற்கும் குற்றவாளிகளைத் தண்டிப்பதற்குமான சட்டரீதியான அதிகாரத்தையுடையதாகும்.
   E – தாராளவாதிகளால் ஒரு பொதுச் சமூகத் தாபனமாகவும் சமதர்மவாதிகளால் வர்க்கக் கருவியாகவும் நோக்கப்படுகிறது.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

5. இறைமை என்பது
   A – அரசுகள் மட்டும் அனுபவிக்கும் உயர்ந்ததும் தனிமுதன்மையானதுமான அதிகாரமாகும்.
   B – உள்வாரியானதும் வெளிவாரியானதுமான இரு பகுதிகளையுடையது எனக் கருதப்படுகிறது.
   C – அரசின் முக்கியமானதும் தனித்துவமானதுமான பண்பாகும்.
   D – அரசின் ஆன்மாவாக இருப்பதோடு அரசினால் பலவந்த அதிகாரத்தைப் பயன்படுத்துவதற்கான சட்டரீதியான தன்மையையும் வழங்குகிறது.
   E – பலமான அரசுகளைப் பலவீனமான அரசுகளிலிருந்து வேறுபடுத்துவதற்குப் பயன்படுத்தும் ஓர் அளவுகோலாகும்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 2 ஐப் பார்க்க

6. அரசாங்கம் என்பது
   A – அரசியல் சமூகத்தின் பொது விருப்பினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசின் முகவராகும்.
   B – தனது விருப்பினை நடைமுறைப்படுத்துவதற்காக அரசு பிரயோகிக்கும் கருவியாகும்.
   C – ஜனநாயகரீதியானதாகவோ ஜனநாயகரீதியற்றதாகவோ இருக்கலாம்.
   D – ஒருவரையோ சிலரையோ பலரையோ கொண்டிருக்கலாம்.
   E – ஜனநாயக அல்லது ஜனநாயகமற்ற வழிமுறைகளில் மாற்றியமைக்கப்படலாம்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

7. சமஷ்டி அரசாங்கம் என்பது
   A – பல மட்டங்களிலான அரசாங்கங்களுக்கிடையில் செங்குத்தான அதிகாரப் பகிர்வினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
   B – அதிகார வேறாக்கம் பற்றிய பிறிதொரு வகையாகும்.
   C – பல்வேறு இனக் குழுக்களை ஓர் அரசியல் முறைமைக்குள் ஒன்றிணைப்பதற்கு உதவுகிறது.
   D – வேற்றுமையோடு ஒற்றுமையை ஒன்றிணைக்கும் ஒரு முறை எனக் கருதப்படுகிறது.
   E – ஒருமைத் தன்மையான சமூகங்களையுடைய நாடுகளுக்குப் பொருத்தமானது எனக் கருதப்படுகிறது.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

8. ஒற்றையாட்சி என்பது
   A – ஒரு தனித்த அதிகார நிலையத்தினைத் தளமாகக் கொண்டமைந்ததாகும்.
   B – தேசிய அரசியலை நோக்கமாகக் கொண்டு தேசிய ஒருமைப்பாட்டினை விருத்தி செய்வதற்கு உதவுகின்றது.
   C – ஒரு தனித்த நிர்வாக மற்றும் நீதி முறைமையைப் பேணுவதற்கு உதவுகின்றது.
   D – பிரதேச மூலவளங்களைத் தேசியக் கொள்கைகளினூடாகச் சமமாகப் பயன்படுத்துவதற்கு உதவுகின்றது.
   E – பன்முகச் சமூகங்களையுடைய பெரிய அரசுகளுக்கு அதிகம் பொருந்துகிறது எனக் கருதப்படுகிறது.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

9. மந்திரி சபை அரசாங்க முறைமை என்பது
   A – நாம மற்றும் உண்மை என்ற இரு நிறைவேற்றுப் பகுதிகளைக் கொண்டுள்ளது.
   B – செயற்றிறன் மிக்கதும் ஜனநாயகத் தன்மை குறைந்ததுமான அரசாங்க முறைமை எனக் கருதப்படுகிறது.
   C – உண்மை நிறைவேற்றுப் பகுதியை நியமிக்கும் நாம நிர்வாகியினால் தலைமை தாங்கப்படுகிறது.
   D – நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருப்பதால் பொறுப்புடைய அரசாங்கம் எனக் கருதப்படுகிறது.
   E – அரசின் தலைவரும் அரசாங்கத்தின் தலைவரும் வேறுபடுத்தப்பட்ட ஓர் அரசாங்க முறைமையாகும்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

10. ஜனாதிபதி அரசாங்க முறைமை என்பது
   A – ஜனாதிபதி என்ற தனித்த நிறைவேற்றுப் பகுதியால் தலைமை தாங்கப்படுகிறது.
   B – நேரடியாகத் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று மற்றும் சட்டத் துறைகளைக் கொண்டதாகும்.
   C – நிறைவேற்று மற்றும் சட்டத் துறைகளுக்கிடையில் சேய்மையான தொடர்பினை வெளிப்படுத்துகிறது.
   D – ஜனநாயகத் தன்மை குறைந்ததும் செயற்றிறன் மிக்கதுமாகும் எனக் கருதப்படுகிறது.
   E – அரசியல், பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நாடுகளுக்குப் பொருத்தமான முறைமையாகும்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

11. தாராள ஜனநாயக அரசாங்கத்தின் சில பிரதான பண்புகளாவன
   A – பொருளாதாரம் அரசினால் கட்டுப்படுத்தப்படுதல்.
   B – நீதித்துறையின் சுதந்திரத்துடன் கூடிய சட்டவாட்சியை அடிப்படையாகக் கொண்ட யாப்புறு அரசாங்கம்.
   C – சிவில் சுதந்திரங்களும் தனிமனித உரிமைகளும் ஊடகச் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.
   D – சர்வஜன வாக்குரிமையையும் அரசியல் பன்மைவாதத்தின் ஏற்புடைமையையும் அடிப்படையாகக் கொண்ட காலாகாலத் தேர்தல்கள்.
   E – ஒழுங்கமைந்த குழுக்களும் நலன்களும் சுதந்திரத்தை அனுபவிக்கும் ஆரோக்கியமான சிவில் சமூகம்.
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

12. அனைத்தாண்மை அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன
   A – தனிமுதன்மை அதிகாரம் ஒரு தனி நபரிடம் குவிந்திருத்தல்
   B – ஆட்சியாளன் சட்டத்துக்கு மேலானவனாகவும் யாப்புறு வரையறைகளுக்கு அப்பாற்பட்டவனாகவும் இருத்தல்
   C – ஒரு தனிக் கட்சியின் ஆதிக்கத்துடன் கூடிய போட்டிக் கட்சி முறை
   D – தன்னிச்சையாகவும் தடைகளின்றியும் அரச அதிகாரத்தைப் பிரயோகித்தல்
   E – சமூக மற்றும் தனி மனித இருப்பின் சகல பகுதிகளிலும் பரவிய அரசியல் கட்டுப்பாடு நிலவுதல்
   (1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 3 ஐப் பார்க்க

**13.** முதலாளித்துவ அரசாங்க முறைமையின் பிரதான பண்புகளாவன

A – சந்தைச் சக்திகளின் அடிப்படையில் பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்

B – உற்பத்திச் செல்வத்தில் தனியுடைமை நிலவுதல்

C – பயன்பாட்டுப் பெறுமதியை விட சந்தைப் பெறுமதியினால் பண்டங்களினதும் சேவைகளினதும் விலைகள் நிர்ணயிக்கப்படுதல்

D – சந்தைச் சக்திகளைக் கட்டுப்படுத்துவதில் அரசு முழுமையாகத் தவிர்ந்திருத்தல்

E – மூலப்பொருள் சார்ந்த நலன்கள், இலாபத்தை உச்சப்படுத்தல் ஆகிய சக்திகளினால் கட்டுப்படுத்தப்படும் ஒரு முறைமையாக இருத்தல்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**14.** சமதர்ம அரசியல் முறைமையின் பிரதான பண்புகளாவன

A – செல்வத்தில் கூட்டுடைமை

B – பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம்

C – வர்க்கங்களற்ற சமூகம்

D – மனிதத் திருப்தி மற்றும் நுகர்வுக்காகப் பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்

E – தனிக் கட்சி ஆதிக்க அரசாங்கம்

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**15.** சட்டம் என்பது

A – கட்டளையிடுதல், தடைசெய்தல், உரித்துகள் என்பன தொடர்பான விதிகளின் தொகுதியாகும்.

B – அரசாங்கத்தினால் ஆக்கப்பட்டு சமூகம் பூராவும் பிரயோகிக்கப்படுகிறது.

C – அரசின் விருப்பினை வெளிப்படுத்தும் கருவி எனக் கருதப்படுகிறது.

D – பொலிசாரினால் தண்டிக்கப்படுவோம் என்ற பயத்தினால் மக்களின் அடிபணிதலுக்குட்படுகிறது.

E – கட்டாயமானதாக இருப்பதோடு சட்டத்துக்குக் கீழ்படிதலைத் தெரிவுக்குரியதாக்குவதற்குப் பிரஜைகளுக்கு உரிமை வழங்கப்படுவதில்லை.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **16 – 25** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் தலைப்புக்குப் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவு செய்க.

**16.** மனித உரிமைகளானவை

(1) மனிதப் பிறவிகளாக இருப்பதனால் மனிதர்களுக்குரித்தாகும் உரிமைகளாகும்.

(2) சகல மனிதருக்கும் உரித்தாகுவதனால் அவை அனைத்துலகத் தன்மை வாய்ந்தனவாகும்.

(3) பாராதீனப்படுத்துவதற்கும் மாற்றிக் கொடுக்கவும் மீளப்பெறவும் முடியாததாக இருப்பதனால் அடிப்படை உரிமைகளாகின்றன.

(4) சகல மனிதப் பிறவிகளினது மதிப்புக்கும் இருப்புக்கும் அத்தியாவசியமானவையாகும்.

(5) சட்டத்தினால் கோரப்படக்கூடிய உரிமைகள் மட்டுமாகும்.

**17.** சொத்து என்பது

(1) 'சுய உடைமையை' அடிப்படையாகக் கொண்ட ஓர் உரிமையாகும்.

(2) பொருளாதாரச் செழுமையையும் செயற்றிறனையும் உத்தரவாதப்படுத்துவதற்கு உழைப்புக்கு வழங்கப்படும் ஊக்குவிப்பாகும்.

(3) தனிப்பட்டவர்களின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் சுய இருப்பையும் பலப்படுத்தும் ஒரு முக்கிய உரிமையாகும்.

(4) சமூகப் பெறுமானங்களை அபிவிருத்தி செய்யப் பங்காற்றும் ஒரு பிரதான காரணியுமாகும்.

(5) தனிப்பட்டவர்களின் சமூக இருப்புக்கு அத்தியாவசியமான ஒன்று என்று சமதர்மவாதிகளும் ஏற்றுக்கொள்கின்றனர்.

**18.** அரசியல் பிரதிநிதித்துவம் என்பது

(1) ஒரு தனி மனிதன் அல்லது ஒரு குழு ஒரு பரந்த ஜன சமூகம் சார்பாகத் தோன்றும் அல்லது செயற்படும் விதத்தினைக் காட்டும் ஒரு தொடர்பு முறையாகும்.

(2) பிரதிநிதித்துவ அரசாங்கத்தை நடைமுறைப்படுத்தும் ஒரு வழிமுறையாகும்.

(3) ஜனநாயக ஆட்சியில் அரசாங்கத்தையும் மக்களையும் இணைக்கும் ஓர் ஊடகமாகும்.

(4) ஒரு வாக்கு - சமமற்ற பெறுதிகள் என்பதனடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

(5) நவீன சூழ்நிலைகளில் ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய ஒரே வழிமுறை எனக் கருதப்படுகிறது.

**19.** பிரசை என்பவர்

(1) அரசின் ஒப்புதலோடு ஓர் அரசியல் சமூகத்தின் உறுப்பினன் என வரைவிலக்கணப்படுத்தப்படுகிறார்.
(2) அரசினால் வழங்கப்படும் விஷேட உரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டவராவார்.
(3) வெளிநாட்டவர்களுடன் ஒத்தவராகின்றார்.
(4) பிறப்பினால் அல்லது பதிவினால் கிடைக்கப் பெறுகிறது.
(5) வாக்குரிமையையும் சில அரசப் பதவிகளையும் வழங்குவதற்கான ஓர் அளவுகோலாகும்.

**20.** சிவில் சமூகம் என்பது

(1) அரசக் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுபட்ட ஒரு சமூகமாகும்.
(2) அரசுக்கும் குடும்பத்துக்கும் வெளிவாரியாக ஒழுங்கமைந்துள்ள நடுத்தர அமைப்புகளைக் கொண்ட சமூகமாகும்.
(3) ஜனநாயக ஆட்சியின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்கு அத்தியாவசியமான ஒரு காரணி எனக் கருதப்படுகிறது.
(4) அரசாங்க அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்குப் பயன்படுத்தும் ஒரு பிரதான கருவி என ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
(5) மக்களை அரசியல், சமூக ரீதியாகப் பலப்படுத்துவதற்காகப் பயன்படுத்தும் ஒரு கருவியாகக் கருதப்படுகிறது.

**21.** ஐக்கிய அமெரிக்க அரசியல் முறைமையானது

(1) 1787 இல் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும்.
(2) ஐம்பது மாகாண அரசுகளைக் கொண்ட ஒரு சமஷ்டி அரசாகும்.
(3) மக்களால் நேரடியாகத் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியினால் தலைமை தாங்கப்படுகிறது.
(4) பழம் சமஷ்டி மூலக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமஷ்டி முறைமையாகும்.
(5) சமஷ்டி அரசாங்கத்துக்கும் மாகாண அரசுகளுக்குமிடையிலான அதிகாரப் பங்கீட்டினை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**22.** பிரித்தானியப் பாராளுமன்றமானது

(1) சட்டவாக்கத்தில் இறைமை மிக்கதாக இருப்பதனால் எச்சட்டத்தையும் ஆக்குவதற்கும் இரத்துச் செய்வதற்கும் அதிகாரமுடையது.
(2) இரு மன்றுகளைக் கொண்டிருப்பதோடு பொதுமக்கள் சபையே பலம் மிக்க தாபனமாகும்.
(3) அரசியல் நிறைவேற்றுப் பகுதியை நம்பிக்கையில்லாப் பிரேரணையின் மூலம் பதவி நீக்க முடியும்.
(4) அரசியல் நிறைவேற்றுப் பகுதியைத் தெரிவுசெய்யும் மூலமாகும்.
(5) நாம நிர்வாகியினால் அவரது தற்துணிவின் அடிப்படையில் கலைக்கப்படும்.

**23.** 1958 டிகோல் யாப்பின் கீழ் பிரான்சில் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையானது

(1) டிகோல் யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட ஒரு முக்கிய புதிய அம்சமாகும்.
(2) உத்தியோகபூர்வமாகவும் பெயர் குறிப்பிடப்படுவதன் மூலமும் இடம்பெறும் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டதாகும்.
(3) சட்ட மற்றும் நிறைவேற்றுத்துறை உறவுகளின் பாதுகாவலனாகக் கருதப்படுகிறது.
(4) ஜனாதிபதித் தேர்தலையும் ஒப்பங்கோடல்களையும் மேற்பார்வை செய்கிறது.
(5) ஜனாதிபதிக்கெதிராகக் கொண்டுவரப்படும் குற்றப் பிரேரணையை விசாரணை செய்கிறது.

**24.** இந்திய உயர் நீதிமன்றமானது

(1) 1950 அரசியல் யாப்பின் மூலம் தாபிக்கப்பட்டது.
(2) பிரதம நீதியரசரையும் ஏனைய இருபத்தைந்து நீதியரசர்களையும் கொண்டதாகும்.
(3) அரசியல் யாப்பின் பாதுகாவலனாகவும் அடிப்படை உரிமைகளின் பொறுப்பாளராகவும் செயற்படுவதற்கு அதிகாரம் பெற்றுள்ளது.
(4) அரசியல் யாப்பினை விவரணம் செய்யும் அதிகாரத்தைப் பெறவில்லை.
(5) பெற்றுள்ள அதிகாரங்களினதும் பணிகளினதும்படி அமெரிக்க உயர்நீதிமன்றைப் பெரும்பாலும் ஒத்துள்ளது.

**25.** சுவிட்சர்லாந்தின் சமஷ்டிச் சட்டத்துறையானது

(1) ஒரு மன்ற முறையினதாகும்.
(2) மக்கள் அதிகாரத்துக்குட்பட்டு அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் கருவியாகும்.
(3) சகல வகையான சமஷ்டிச் சட்டங்களையும் ஆக்கும் அதிகாரத்தினைப் பெற்றுள்ளது.
(4) நிறைவேற்றுப் பகுதியையும் சமஷ்டி நீதிமன்ற உறுப்பினர்களையும் ஏனைய பிரதான சமஷ்டி அதிகாரிகளையும் இராணுவத் தளபதியையும் நியமிக்கும் அதிகாரத்தினைப் பெற்றுள்ளது.
(5) சகல சமஷ்டி அதிகாரத் தாபனங்களையும் மேற்பார்வை செய்யும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

[பக். 5 ஐப் பார்க்க

● **26 – 32** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் தலைப்புக்குப் பொருந்தும் கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**26.** 1833 கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்கள்

A – வரையறுக்கப்பட்ட வாக்குரிமையைப் பிரேரித்தன.
B – தேசாதிபதியின் தன்னிச்சையான ஆட்சியைப் பலவீனப்படுத்தின.
C – ஜனநாயக ஆட்சியின் ஆரம்பத்தினைக் குறித்து நின்றன.
D – தேசாதிபதிக்கு உதவுவதற்கு சட்ட நிர்வாக, சட்ட நிரூபண மன்றுகளைத் தாபித்தன.
E – அரசாங்க முறையை ஐக்கியப்படுத்தின.

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

**27.** 1833 கோல்புரூக் - கமரன் சீர்திருத்தங்கள்

A – முதலாளித்துவப் பொருளாதார முறையின் அபிவிருத்திக்கான தளத்தினை இட்டன.
B – ஓர் ஐக்கிய அரசினை நிர்மாணிப்பதற்கான தளத்தினை இட்டன.
C – சுதந்திரமான நீதித்துறையினதும் நிர்வாக முறைமையினதும் அபிவிருத்திக்கான தளத்தினை இட்டன.
D – சுதந்திரமான ஊழியச் சந்தையின் அபிவிருத்திக்குப் பங்காற்றின.
E – மலையகத்தில் மிஷனரி செயற்பாடுகளைத் தடைசெய்தன.

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

**28.** பிரித்தானியராட்சியின்கீழ் இலங்கை வர்த்தகப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை முறையின் அபிவிருத்திக்குப் பங்காற்றிய காரணிகளாவன

A – குடியேற்ற நாட்டாட்சியின் மூலம் பிரசாரம் செய்யப்பட்ட சமயச் சார்பற்ற கருத்துகள்
B – வெளிநாட்டு வங்கிகளினால் வழங்கப்பட்ட முதலீட்டு மூலதனம்
C – இந்திய ஊழியர்களின் மலிவான ஊழியம்
D – மலையக மக்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நிலம்
E – பிரித்தானியப் பயிர்ச்செய்கையாளர்கள் வழங்கிய முயற்சியாண்மைத் தலைமைத்துவம்

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

**29.** 1911 அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள்

A – சட்டமன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 21 வரை அதிகரித்தன.
B – முதன்முதலாகப் பிரதிநிதித்துவ மூலக்கொள்கையை அறிமுகம் செய்தன.
C – தேசாதிபதியின் அதிகாரங்களைக் கடுமையாகக் குறைத்தன.
D – இனவாரிப் பிரதிநிதித்துவத்தைத் தொடர்ந்தும் பேணின.
E – தேர்தல் மூலம் ஒரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்குச் சுதேசிகளுக்கு அதிகாரத்தினை வழங்கின.

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

**30.** 1924 யாப்புச் சீர்திருத்தங்களின் பிரதான பண்புகளாவன

A – இனவாரிப் பிரதிநிதித்துவத்தினை வரையறை செய்தமை.
B – சட்டமன்றின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 49 வரை அதிகரித்தமை.
C – முதன்முதலாகச் சட்டமன்றில் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைப் பெரும்பான்மையினராக ஆக்கியமை.
D – நிதிக் குழுவின் அதிகாரங்களையும் பணிகளையும் பலப்படுத்தியமை.
E – பொறுப்பும் அதிகாரமும் வேறுபடுத்தப்பட்ட ஓர் அரசாங்கத்தினைத் தாபித்தமை.

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

**31.** இலங்கையின் தேசிய இயக்கம்

A – ஆசியாவிலேயே அமைதியான தேசிய விடுதலை இயக்கமாக இருந்தது.
B – மேற்கத்தியமயமாகிய உயர்குழாம் வகுப்பினரால் ஆரம்பிக்கப்பட்டு கொண்டு நடத்தப்பட்டது.
C – உள்ளூர் சுயாட்சியை மட்டுமே கோரி நின்றது.
D – ஒரு மகாஜன இயக்கமாக இருக்கவில்லை.
E – இந்திய தேசிய இயக்கத்தினைப் பெரும்பாலும் ஒத்திருந்தது.

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

**32.** 1930 களில் இலங்கையில் இடதுசாரி இயக்கம் தோற்றம் பெறுவதில் பங்களிப்புச் செய்த காரணிகளாவன

A – 1930 களில் இலங்கை எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடி
B – 1930 களில் தோன்றிய சமய மறுமலர்ச்சி மற்றும் கலால் இயக்கங்கள்
C – 1930 களின் ஆரம்பப் பகுதியில் ஒழுங்கமைந்த தீவிர தொழிலாளர் இயக்கத்தின் தோற்றம்
D – அரசியல் சுதந்திரத்தைப் பெறுவதில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் பின்பற்றிய தளர்ச்சியானதும் தொன்மையானதுமான கொள்கை
E – மாக்சியவாதத்தைத் தழுவிய மேற்கத்திய கல்வியைப் பயின்ற இளம் தீவிரக் குழுவின் தோற்றம்

(1) ABCD   (2) BCDE   (3) ABDE   (4) ACDE   (5) ABCE

[பக். 6 ஐப் பார்க்க

● **33 – 36** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் தலைப்புக்குப் **பொருந்தாத** கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**33.** 1931 இல் அறிமுகஞ் செய்யப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் அறியப்படுவது

A – கோல்புரூக் - கமரன் சீர்திருத்தம் என்றாகும்.
B – மனிங் சீர்திருத்தம் என்றாகும்.
C – மனிங் - டெவன்ஷயர் சீர்திருத்தம் என்றாகும்.
D – டொனமூர் சீர்திருத்தம் என்றாகும்.
E – சோல்பரி சீர்திருத்தம் என்றாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**34.** 1931 அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டமன்றம் அழைக்கப்படுவது

A – பாராளுமன்றம் என்றாகும்.
B – காங்கிரஸ் என்றாகும்.
C – ஏகாதிபத்திய மன்றம் என்றாகும்.
D – தேசியப் பேரவை என்றாகும்.
E – அரசாங்க சபை என்றாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**35.** டொனமூர் அரசாங்க முறையில் "காவல் நாய்கள்" என்ற சொல் பயன்படுத்தப்பட்டமை

A – தேசாதிபதியையும் மூன்று அரசக் காரியதரிசிகளையும் குறிப்பிடுவதற்காகும்.
B – மூன்று அரசக் காரியதரிசிகளைக் குறிப்பிடுவதற்காகும்.
C – தேசாதிபதியையும் குடியேற்ற நாட்டுச் செயலாளரையும் மூன்று அரசக் காரியதரிசிகளையும் குறிப்பிடுவதற்காகும்.
D – அமைச்சரவை உறுப்பினர்களைக் குறிப்பிடுவதற்காகும்.
E – அமைச்சரவையின் சுதேச உறுப்பினர்களைக் குறிப்பிடுவதற்காகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**36.** டொனமூர் யாப்பின்படி அமைச்சரவையானது அரசாங்க சபைக்குக் கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டியிருந்த விடயமாவது

A – போர்ச் செயற்பாடுகள் தொடர்பான செலவுகள் பற்றி மட்டுமேயாகும்.
B – வருடாந்த வரவு-செலவுத் திட்டம் பற்றி மட்டுமேயாகும்.
C – அமைச்சரவையின் சகல நிறைவேற்றுத் தீர்மானங்கள் பற்றி மட்டுமேயாகும்.
D – தேசாதிபதி, மூன்று அரசக் காரியதரிசிகள் தொடர்பான செலவு பற்றி மட்டுமேயாகும்.
E – அமைச்சரவையைக் கொண்டு நடாத்துவதற்கான செலவு பற்றி மட்டுமேயாகும்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

● **37 – 50** வரையிலான வினாக்களிலுள்ள ஐந்து கூற்றுகளுள் வினாக்களின் தலைப்புகளுக்குப் பொருந்துகின்ற கூற்றுகளின் தொகுதியைத் தெரிவுசெய்க.

**37.** 1948 அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

A – பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினுள் இலங்கைக்கு டொமீனியன் அந்தஸ்தினை வழங்கியது.
B – பிரித்தானிய முடியை இலங்கையின் அரச தலைவராக ஆக்கியது.
C – பிரித்தானிய முறையை ஒத்த பாராளுமன்ற அரசாங்க முறையைத் தாபித்தது.
D – வரையறுக்கப்பட்ட சட்டவாக்க அதிகாரத்துடன்கூடிய ஓர் இருமன்ற முறைமையை உருவாக்கியது.
E – இறுதி மேன்முறையீட்டு அதிகாரம் பெற்ற உயர் நீதிமன்றின் தலைமையின் கீழமைந்த ஒரு நீதிமன்றுகள் முறைமையைத் தாபித்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**38.** 1948 அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் கீழமைந்த அரசாங்க முறையின் பிரதான பண்புகளாவன

A – உண்மை மற்றும் நாம நிர்வாகங்கள் என்ற இரட்டை நிர்வாகம்
B – மேல் மன்றினையும் கீழ் மன்றினையும் கொண்ட சட்டமன்றம்
C – இங்கிலாந்துக் கோமறைக்கழகத்துக்கு இறுதி மேன்முறையீட்டு அதிகாரம் வழங்கப்பட்ட நீதிமன்றங்கள் முறைமை
D – சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விசேட யாப்புக் காப்பீடுகள்
E – அரசியல் நிறைவேற்றுப் பகுதியினால் கட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரமற்ற நிர்வாக முறைமை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 7 ஐப் பார்க்க

**39.** 1948 அரசியல் யாப்பின்கீழ் உண்மை நிர்வாகமானது

A – மந்திரிசபை என்று அழைக்கப்பட்டது.

B – சட்ட மன்ற உறுப்பினர்களிலிருந்து நாம நிர்வாகியினால் நியமிக்கப்பட்டது.

C – பிரதமரினால் தலைமை தாங்கப்பட்டது.

D – சட்டமன்றுக்கு கூட்டாகப் பொறுப்புக் கூற வேண்டியிருந்தது.

E – சட்டமன்றில் நிறைவேற்றப்படும் ஒரு குற்றப் பிரேரணையின் மூலம் பதவி நீக்கம் செய்யப்படக்கூடியதாக இருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**40.** 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழமைந்த அரசாங்க முறையின் சில பண்புகளாவன

A – உண்மை நிர்வாகத்தின் தலைவர் நாம நிர்வாகியை நியமித்தமை

B – நாம நிர்வாகம் உண்மை நிர்வாகத்தை நியமித்தமை

C – பாராளுமன்றின் இறைமைக் கோட்பாட்டின் அடிப்படையிலமைந்த தனிமன்றச் சட்டத்துறை

D – சட்டத்தை விவரணம் செய்யும் அதிகாரத்துடன் கூடிய மேன்முறையீட்டு நீதிமன்றின் தலைமையின் கீழமைந்த நீதி முறைமை

E – அரசியல் நிர்வாகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழமைந்த அரசாங்க சேவை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**41.** 1972 முதலாம் குடியரசு யாப்பின்கீழ் உருவாக்கப்பட்ட சட்டமன்றமானது

A – தேசிய அரசுப் பேரவை என்றழைக்கப்பட்டது.

B – தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட இருவகை உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

C – அரச அதிகாரத்தைப் பிரயோகிக்கும் மீயுயர் கருவி என்று யாப்பில் குறிப்பிடப்பட்டது.

D – சட்டவாக்கம், நிறைவேற்றம், நீதி ஆகிய முத்துறை அதிகாரங்களையும் பிரயோகிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது.

E – குறைந்தது வருடத்துக்கு ஒரு முறையாவது கூட வேண்டியிருந்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**42.** 1972 முதலாம் குடியரசு யாப்பு இலங்கையின் அரசியல் முறைமைக்கு அறிமுகம் செய்த முக்கிய மாற்றங்களாவன

A – இலங்கையை இறைமைமிக்க சுதந்திரக் குடியரசாக மாற்றியமை

B – இலங்கையை ஓர் ஒற்றையாட்சி அரசு எனக் குறிப்பிட்டமை

C – இலங்கைக் குடியரசின் இறைமை மக்களுக்குரியது என்றும் அதனைத் துறக்கலாகாது என்றும் குறிப்பிட்டமை

D – நீதி முன் புனராய்வு அதிகாரத்தைக் கொண்ட ஓர் அரசியல் யாப்பு நீதிமன்றினை அறிமுகம் செய்தமை

E – நீதிமன்ற விசாரணை அதிகாரத்தைக் கொண்ட அடிப்படை உரிமைகளை மக்களுக்கு வழங்கியமை

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**43.** 1978 இரண்டாம் குடியரசு யாப்பானது

A – சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இலங்கையில் நிலவிய அடிப்படை அரசியல் யாப்புப் புறவமைப்பை மாற்றியது.

B – மரபுசார் அரச - முதலாளித்துவ அபிவிருத்தி மாதிரியைக் கைவிட்டது.

C – 1833 லிருந்து வளர்ச்சியடைந்த ஜனநாயக நிறுவன முறைமையை மதிப்புக் குறைத்தது.

D – அரசின் ஒற்றையாட்சி இயல்பினை மாற்றியது.

E – தனிநபரை அடிப்படையாகக் கொண்ட அரசியலை ஊக்குவித்தது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**44.** 1978 இரண்டாம் குடியரசு யாப்பின் கீழுள்ள ஜனாதிபதி

A – எத்தனை தடவையும் பதவி வகிக்கலாம்.

B – தடைகளற்ற பரந்த நிறைவேற்று, சட்டவாக்க, நீதி அதிகாரங்களைப் பெற்றுள்ளார்.

C – மேற்கொள்ளும் செயல்கள் ஒரு விஷேட தீர்மானமின்றி பாராளுமன்றில் விவாதிக்கப்படலாம்.

D – அரசியல் யாப்பின் மூலம் சட்டத்துக்கு மேலானவராக வைக்கப்பட்டுள்ளார்.

E – பொதுவாக யாப்புசார் சர்வாதிகாரி என்று விபரிக்கப்படுகின்றார்.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

**45.** 1978 யாப்பின்கீழ் உருவாக்கப்பட்ட சட்டமன்றமானது

A – பாராளுமன்றம் என்றழைக்கப்படுகின்றது.

B – தெரிவுசெய்யப்படும் மற்றும் நியமிக்கப்படும் இரு வகை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

C – சட்டவாக்கத்தில் இறைமை பொருந்திய நிறுவனமன்று.

D – கூட்டம் கூடுவதற்குக் குறைந்தது 30 உறுப்பினர்கள் சமுகமளித்திருக்க வேண்டும்.

E – ஜனாதிபதிக்கு எதிராகக் குற்றப் பிரேரணையைக் கொண்டுவரும் அதிகாரத்தினைப் பெற்றுள்ளது.

(1) ABCD (2) BCDE (3) ABDE (4) ACDE (5) ABCE

[பக். 8 ஐப் பார்க்க

**46.** மாகாண சபைகள்

A – 1964 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தாபிக்கப்பட்டன.
B – 13ஆம் திருத்தச் சட்டத்தின் மூலம் அடிப்படைச் சட்டத்தின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டன.
C – மாகாண சபை நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாக நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.
D – ஒருங்கியை நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாகத் தனியாகச் சட்டவாக்கம் செய்ய முடியாது.
E – இறைமை பொருந்திய நிறுவனங்களன்று.

(1) ABCD　(2) BCDE　(3) ABDE　(4) ACDE　(5) ABCE

**47.** இலங்கையிலுள்ள உள்ளூராட்சி மன்றுகள்

A – மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் என மூவகைப்படும்.
B – மத்திய அரசின் மேற்பார்வையின்கீழ் செயற்பட வேண்டும்.
C – தமது அதிகாரப் பிரதேசங்களில் சமூகப் பயன்பாட்டுச் சேவைகளை வழங்கும் பொறுப்பினைப் பெற்றுள்ளன.
D – மூன்று வருடங்களுக்குப் பதவி வகிப்பதற்காகத் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களை மட்டுமே கொண்டுள்ளது.
E – மத்திய அரசினால் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின்படி செயற்பட வேண்டியிருப்பதால் சுயாதீனமான நிறுவனங்களன்று.

(1) ABCD　(2) BCDE　(3) ABDE　(4) ACDE　(5) ABCE

**48.** ஐக்கிய நாடுகள் தாபனம்

A – தற்கால உலகில் பரந்த நோக்கங்களையுடைய பாரிய அரசு சார்பு நிறுவனமாகும்.
B – 1945 சான் பிரான்சிஸ்கோ மாநாட்டில் 50 தேசங்களினால் கைச்சாதிடப்பட்ட ஒரு சாசனத்தின்படி தாபிக்கப்பட்டது.
C – உறுப்பரசுகளின் சமமான இறைமையை ஏற்கும் மூலக்கொள்கையின்படி செயற்படுகிறது.
D – உறுப்பரசுகளின் உள்ளக விவகாரங்களில் தலையிடுவதற்கு சாசனத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.
E – தற்கால உலகில் சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாகச் செயற்பாடும் பிரதான சர்வதேச நிறுவனமாகும்.

(1) ABCD　(2) BCDE　(3) ABDE　(4) ACDE　(5) ABCE

**49.** பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசியச் சங்கம்

A – பரந்த நோக்கங்களையுடைய ஒரு பிராந்திய நிறுவனமாகும்.
B – எட்டு தென்னாசிய அரசுகளைக் கொண்டதாகும்.
C – அரசியல் சாராப் பரப்புகளில் உறுப்பரசுகளுக்கிடையில் ஒத்துழைப்பினை விருத்தி செய்வதற்காகச் செயற்படுகிறது.
D – 08.12.1985 டாக்கா பிரகடனத்தின் மூலக்கொள்கையின் அடிப்படையில் தாபிக்கப்பட்டது.
E – சர்வதேச சமூகத்தில் "வறியோரின் அமைப்பு" என்றழைக்கப்படுகிறது.

(1) ABCD　(2) BCDE　(3) ABDE　(4) ACDE　(5) ABCE

**50.** பொதுநலவாய அமைப்பு

A – வரையறுக்கப்பட்ட நோக்கங்களையுடைய நடுத்தர அரச சார்பற்ற நிறுவனமாகும்.
B – பிரதானமாக முன்னாள் பிரித்தானியக் காலனித்துவ நாடுகளைக் கொண்டுள்ளது.
C – உறுப்பரசுகளின் பொருளாதார, சமூக அபிவிருத்தியில் கவனம் செலுத்துகிறது.
D – பிரித்தானிய மகா இராணியாரினால் தலைமை தாங்கப்படுகிறது.
E – 1950 இல் நிறைவேற்றப்பட்ட யாப்பின் கீழ் தாபிக்கப்பட்டது.

(1) ABCD　(2) BCDE　(3) ABDE　(4) ACDE　(5) ABCE

❊ ❊ ❊

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

18596

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண்: ..................................

| A பகுதி | |
|---|---|
| மொத்தப் புள்ளிகள் | 20 |

அறிவுறுத்தல்கள்:

- ※ இவ்வினாப்பத்திரம் A, B, C என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்.
- ※ பகுதி A 20 குறு வினாக்களைக் கொண்டுள்ளது. பூரண ஒவ்வொரு விடைக்கும் 01 புள்ளியும் அரைகுறை விடைக்கு 1/2 புள்ளியும் வழங்கப்படும். சகல வினாக்களுக்குமான குறு விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதி அதனைப் பகுதி B, பகுதி C விடைத்தாள்களுடன் இணைக்குக.
- ※ பகுதி B யிலிருந்தும் C யிலிருந்தும் **இவ்விரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து எல்லாமாக **நான்கு** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி A

1. (i) "அரசியல் விஞ்ஞானத்தின் தந்தை" எனக் கருதப்படும் அரசியல் தத்துவஞானியின் பெயரைக் குறிப்பிடுக.
   (ii) "நவீன அரசியலின் தந்தை" எனக் கருதப்படும் அரசியல் சிந்தனையாளரின் பெயரைக் குறிப்பிடுக.
   1. ..........................................................
   2. ..........................................................

2. (i) "தத்துவஞானிகள் அரசர்களாகும் வரை அல்லது இவ்வுலகில் அரசர்களும் இளவரசர்களும் தத்துவத்தின் சாரத்தையும் அதிகாரத்தையும் புரிந்துகொள்ளும் வரை அரசுகள் எதிர்கொண்டுள்ள தீங்குகளிலிருந்து அவை மீள மாட்டா".
   (ii) "அரசியல் என்பது ஒரு போராட்டமாகும். அது நிலையான அதிகாரப் போராட்டமாகும். சகல அரசியலும் அதிகார அரசியலாகும்".
   மேற்குறிப்பிட்ட இரு கூற்றுகளையும் முன்வைத்த **இரு** நூல்களினதும் அவற்றின் ஆசிரியர்களினதும் பெயர்களைக் குறிப்பிடுக.
   1. ..........................................................
   2. ..........................................................

3. "தற்கால உலகில் தாராள ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் மூன்று அரசாங்க முறைகள் காணப்படுகின்றன". அவற்றுள் **இரண்டின்** பெயர்களைத் தருக.
   1. ..........................................................
   2. ..........................................................

4. பண்புசார் காரணிகளின் அடிப்படையில் அரசியல் கட்சிகள் இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. அவ் **இரு** வகைகளையும் குறிப்பிடுக.
   1. ..........................................................
   2. ..........................................................

5. "விகிதசமப் பிரதிநிதித்துவம் இரு முறைகளில் பயன்படுத்தப்படுகின்றது". அவ் **இரு** முறைகளையும் குறிப்பிடுக.
   1. ..........................................................
   2. ..........................................................

6. மக்கள் பங்கேற்கும் விதத்தின் படி தாராள ஜனநாயகத்தினை நடைமுறைப்படுத்தும் இரு முறைகள் காணப்படுகின்றன. அவ் **இரு** முறைகளையும் குறிப்பிடுக.
   1. ..........................................................
   2. ..........................................................

[பக். 2 ஐப் பார்க்க

7. இறைமை மற்றும் வலுவேறாக்கம் ஆகிய இரு கோட்பாடுகளையும் முன்வைத்த **இரு** சிந்தனையாளர்களினதும் பெயர்களைக் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

8. ஜனாதிபதி அரசாங்க முறையில் ஜனாதிபதியையும் மந்திரி சபை அரசாங்க முறையில் மந்திரி சபை மற்றும் பிரதமரையும் பதவி நீக்கம் செய்வதற்குச் சட்டத்துறை பயன்படுத்தும் அவ்வவ் வழிமுறைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

9. "அரசாங்கமானது தனது அதிகாரத்தை மக்கள் மீது பிரயோகிப்பதற்கு இரு கருவிகளைப் பயன்படுத்துகின்றது". அவ் **இரு** கருவிகளையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

10. "சர்வதேச நிறுவனங்கள் இரு நிறுவன வகைகளைக் கொண்டுள்ளன". அவ் **இரு** நிறுவன வகைகளையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

11. "கோல்புருக் ஆணைக்குழுவின் சிபார்சுகளின்படி 1833 இல் தாபிக்கப்பட்ட சட்ட மன்றம் இரு வகையான உறுப்பினர்களைக் கொண்டிருந்தது". அவ் **இரு** உறுப்பினர் வகைகளையும் குறிப்பிட்டு, அவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

12. "டொனமூர் அரசாங்க முறையில் செயற்பட்ட அமைச்சரவை இரு வகையான அமைச்சர்களைக் கொண்டிருந்தது". அவ் **இரு** அமைச்சர்களினது வகைகளையும் அவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

13. "சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட செனெற் சபையின் உறுப்பினர்கள் இரு வழிமுறைகளில் பதவியமர்த்தப்பட்டனர்". அவ் **இரு** வழிமுறைகளையும் அவற்றின் எண்ணிக்கையையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

14. சிறுபான்மை ஜனக்குழுக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு சோல்பரி யாப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் **இரு** காப்பீடுகளைக் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

15. "1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசியல் யாப்பு நீதிமன்றின் முன்னிலையில் இரு வகையான சட்டமூலங்களைச் சமர்ப்பிக்க முடிந்ததுடன் அந்நீதிமன்றம் அவ்விரு சட்டமூலங்கள் தொடர்பாகச் செயற்படக்கூடிய இரு காலப்பகுதிகளும் காணப்பட்டன". அவ் **இரு** சட்டமூலங்களையும் அவற்றுக்கான காலக்கெடுவையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

16. 1972 யாப்பின் கீழ் நீதி விவகாரங்கள் தொடர்பாகச் செயற்படுவதற்காகத் தாபிக்கப்பட்ட **இரு** யாப்புசார் சபைகளையும் அவற்றின் அமைவுச் சேர்க்கையையும் குறிப்பிடுக.

1. ................................................................................................................................

2. ................................................................................................................................

17. "1987 இல் இரு சட்ட ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே மாகாண சபைகள் தாபிக்கப்பட்டன". அவ் **இரு** சட்ட ஏற்பாடுகளையும் குறிப்பிடுக.

1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

18. "1978 யாப்பின் கீழ் இரு விடயங்கள் தொடர்பாகத் தனியானதும் பிரத்தியேகமானதுமான நியாயாதிக்கம் உயர் நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளது". அவ் **இரு** விடயங்களையும் குறிப்பிடுக.

1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

19. "1978 யாப்பின் கீழ் மக்களின் சட்டவாக்க அதிகாரமானது இரு மட்டங்களில் இரு வேறுபட்ட முறைகளில் நடைமுறைப்படுத்தப்படுகின்றது". அவ் **இரு** முறைகளையும் **இரு** மட்டங்களையும் குறிப்பிடுக.

1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

20. "ஐக்கிய நாடுகள் தாபனத்தின் ஒழுங்கமைப்புக் கட்டமைவு ஆறு பிரதான தாபனங்களின் மீது தாபிக்கப்பட்டுள்ளது." அவற்றுள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

* *

The National e-learning Portal for The General Education

[பக். 4 ஐப் பார்க்க